Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, அக்டோபர் 16, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 94

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தி.நகரில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.




சென்னை, அக்டோபர் 16 2022: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், உத்தரவின்பேரில், பொதுமக்கள் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக வருகிற 24.10.2022 அன்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கும் வெளியூர் செல்வதற்கும் அதிகளவு கூடுவதால், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, சென்னை பெருநகர காவல்துறை சார்பில், பல்வேறு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால், உத்தரவின்பேரில், பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்காக சென்னையில் அதிகளவு கூடும் இடங்களான தி.நகர், பாண்டிபஜார், புரசைவாக்கம், மயிலாப்பூர், பூக்கடை, வண்ணாரப்பேட்டை, கோயம்பேடு ஆகிய பகுதிகளில் சென்னை பெருநகர காவல்துறை சார்பில், பல்வேறு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர்ஜிவால், தி.நகர் ரங்கநாதன் தெரு, உஸ்மான் சாலை, மற்றும் தி.நகர் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் சென்னை பெருநகர காவல் துறை சார்பாக செய்யப்பட்டுள்ள சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். இந்நிகழ்வின் போது கூடுதல் ஆணையாளர் தெற்கு பிரேம் ஆனந்த்சின்ஹா, இணை ஆணையாளர் நரேந்திரன் நாயர், (தெற்கு மண்டலம்) துணை ஆணையாளர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# அமெரிக்கா, இந்தியா மற்றும் இந்தோ பசிபிக் பகுதிகளின் வர்த்தக விண்வெளி வாய்ப்புகளை இணைக்கும் சர்வதேச விண்வெளி மாநாடு சென்னையில் தொடக்கம்

சென்னை, அக்டோபர் 16 2022: சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் சார்பாக "ஸ்பேஸ் டெக்னாலஜி: தி நெக்ஸ்ட் பிசினஸ் ஃபிராண்டியர்" என்கிற தலைப்பில் மூன்று நாள் சர்வதேச விண்வெளி மாநாடு அக்டோபர் 15 அன்று தொடங்கியது. சென்னை ஐஐடி மற்றும் இந்திய விண்வெளி சங்கம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

சென்னை ஐஐடி வளாகத்தில் அக்டோபர் 15 முதல் 17 வரை நடைபெறும் இந்த மாநாட்டில் சர்வதேச விண்வெளி தொழில்நுட்ப துறையை சேர்ந்த முன்னணியினர் கலந்து கொண்டு இந்தோ பசிபிக் பகுதிகளில் உள்ள தொழில் வாய்ப்புகள் மற்றும் கூட்டை மேம்படுத்துவதற்கான சாத்தியங்களை விவாதிக்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியின் துவக்க விழாவில் பேசிய புதுதில்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பொருளாதாரம், சுற்றுச்சூழல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விவகாரங்களுக்கான அமைச்சக ஆலோசகர் ட்ரூஷ ப்லெடோவ்ஸ்கி, "அமெரிக்கா, இந்தியா மற்றும் இந்தோ பசிபிக் நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி உறவுகள் தனியார் துறையின் பங்களிப்பு மூலம் மேலும் வளர்ச்சி அடையும். ராக்கெட், செயற்கைக்கோள், தரை கட்டுப்பாட்டு நிலையம் உள்ளிட்டவற்றின் வடிவமைப்பு மற்றும் தயாரிப்பில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பின் மூலம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி துறை ஒரு மாபெரும் மாற்றத்தை சந்தித்து வருகிறது," என்றார்.




தொடர்ந்து பேசிய அவர், "பூமியை ஆராய்வதற்காக தற்போது இந்திய நிறுவனங்கள் தங்களது சொந்த செயற்கைக்கோள் அமைப்புகளை உருவாக்கி வருகின்றன. இந்த செயற்கைக்கோள்களை புவி வட்ட பாதையில் நிலை நிறுத்த தேவையான ராக்கெட்டுகளையும் அவர்களே தயாரிக்கின்றனர். வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப பங்களிப்பின் மூலம் அமெரிக்கா மற்றும் இந்தோ பசிபிக் நாடுகளில் உள்ள விண்வெளி நிறுவனங்கள் இத்துறையை முன்னெடுத்து செல்ல முடியும்," என்று தெரிவித்தார்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், தென் கொரியா, ஜெர்மனி, இங்கிலாந்து, மலேஷியா, பிலிப்பைன்ஸ், மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட இந்தோ பசிபிக் மற்றும் இதர நாடுகளில் இருந்து 80க்கும் அதிகமானோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு விண்வெளி கொள்கை, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றம், விண்வெளி தொழில்முனைவோருக்கான வாய்ப்புகள் ஆகியவற்றை குறித்து பேச உள்ளனர்.

இந்தோ பசிபிக் விண்வெளி தொழில்முனைவோருக்கான அமைப்பை உருவாக்குவதை இம்மாநாடு நோக்கமாக கொண்டுள்ளது. விண்வெளி துறையில் தொழில்முனைதல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக இந்த அமைப்பு செயல்படும். சர்வதேச விமான (ஏரோஸ்பேஸ்) தொழில் மற்றும் அறிவியில் சார்ந்த விண்வெளி கூட்டணிகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் இம்மாநாட்டில் பரிந்துரைக்கப்படும்.

சென்னை ஐஐடி ஏரோஸ்பேஸ் பொறியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தேசிய கம்பஷன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் (என்சிசிஆர்டி) இயக்குநர் சத்யா சக்ரவர்த்தி தொடக்க உரை நிகழ்த்தினார். இந்தியன் நேஷனல் ஸ்பேஸ் ப்ரோமோஷன் அண்டு ஆத்தரைசேஷன் சென்டர் (இன்ஸ்பேஸ்) மூத்த விஞ்ஞானி மற்றும் தொழில்நுட்ப இயக்குநர் பேராசிரியர் ராஜீவ் ஜோதி; ஸ்டார் பிரிட்ஜ் வென்ச்சர் கேப்பிட்டல் பொது பங்குதாரர் டாக்டர் மைக்கேல் மீலிங்; நாசாவின் புதிய திட்டங்களுக்கான மூத்த ஆலோசகர் மற்றும் திட்ட விஞ்ஞானி டாக்டர் மதுலிக்கா குஹதகுர்தா; இந்திய விண்வெளி சங்கத்தின் தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் அனில் குமார் பட் (ஓய்வு); மற்றும் ஐக்கிய நாடுகள் மற்றும் தொடர்புடைய அமைப்புகளுக்கான உலக புவிசார் தொழில் கவுன்சில், ஆஸ்திரேலியா, தலைவர் பேராசிரியர் டாக்டர். ஜாஃபர் சாதிக் முகமது-கௌஸ் ஆகியோர் மாநாட்டின் தொடக்க நிகழ்வில் பங்கேற்றனர்.

# கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது தேசிய காங்கிரஸ் பொதுக்கூட்டம் துவங்கியது: 3வது முறையாக சீன அதிபராகிறார் ஜி ஜின்பிங்



சென்னை, அக்டோபர் 16 2022: ஹாங்காங்கை முழு கட்டுப்பாட்டில் சீனா கொண்டு வந்துவிட்டது என அதிபர் ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீன அதிபராக 2012 முதல் ஜி ஜின்பிங் செயல்பட்டு வருகிறார்.

சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் 5 ஆண்டுக்கு ஒருமுறை இக்கட்சியின் தேசிய காங்கிரஸ் பொதுக்கூட்டம் நடைபெறும். அந்த கூட்டத்தில் நாட்டின் அதிபர் தேர்ந்தெடுக்கப்படுவார். அந்த வகையில் கடந்த 2017-ம் ஆண்டு நடந்த கூட்டத்திலும் ஜி ஜின்பிங் சீன அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிலையில், சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது தேசிய காங்கிரஸ் பொதுக்கூட்டம் இன்று தொடங்கியது. ஒரு வாரம் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தை சீன அதிபரும், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான ஜி ஜின்பிங் தலைமை ஏற்று தொடங்கி வைத்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 300 நிர்வாகிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தின் முடிவில் சீனாவின் அதிபராக ஜி ஜின்பிங் தொடர்ந்து 3-வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்.

கம்யூனிஸ்ட் தேசிய காங்கிரஸ் கூட்டத்தை துவக்கி வைத்து பேசிய சீன அதிபர் ஜி ஜின்பிங், ஹாங்காங்கை சீனா முழு கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டது. குழப்பத்தில் இருந்து ஹாங்காங்கை ஆட்சிக்கு மாற்றியுள்ளது.

தைவான் நாட்டின் பிரிவினைவாதிகள் தைவானில் சுதந்திரம் பெற வேண்டுமென கிளர்ச்சியை தூண்டினார்கள். நாங்கள் அந்த பிரிவினைவாதிகளுக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளோம். சீனாவின் இறையாண்மையை காப்பாற்றுவோம். அதே சமயம் தைவானின் சுதந்திரத்தை எதிர்க்கிறோம்.

ஹாங்காங்கில் கொந்தளிப்பான முன்னேற்றங்களை எதிர்கொண்டு, சீனாவின் அரசியலமைப்பு மற்றும் ஹாங்காங் சிறப்பு நிர்வாகப் பகுதியின் அடிப்படைச் சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட சிறப்பு நிர்வாகப் பகுதியின் ஒட்டுமொத்த அதிகார வரம்பையும் அரசு பயன்படுத்தியது.

நாங்கள் உலக அளவில் சீனாவின் மரியாதையையும் பாதுகாப்பையும் காப்பாற்றுவோம்.

மேலும் சீனாவை உலக அளவில் நல்ல நிலைமைக்கு கொண்டு வருவோம் என்று அவர் பேசினார்.




**விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி எஸ்.பி.எம் டிரஸ்ட் மற்றும் சங்கமாஸ் இண்டர்நேஷனல் பவுண்டேஷன் சார்பில் இலவச எலும்பு நோய் சிகிச்சை சிறப்பு மருத்துவமுகாமினை பேரூராட்சி சேர்மன் ஆர்.கே.செந்தில் இன்று குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் காரியாபட்டி எஸ்.பி.எம் டிரஸ்ட் நிறுவனர் அழகர்சாமி தலைமை வகித்தார், எஸ்.பி.எம் பாலி கிளினிக் மருத்துவர் ஹரிஷ் முன்னிலை வகித்தார். இதில் விபத்து மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை சிறப்பு மருத்துவர் உமாமகேஸ்வரன் கலந்து கொண்டு இலவச மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார். இதில் சுமார் 1500 ரூபாய் மதிப்புள்ள கனிமச்சத்து கண்டறியும் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் எலும்பு முறிவு நோய், முதுகு வலி, இடுப்பு வலி, முழங்கால் வலி, போன்ற சிகிச்சைகள் வழங்கப்பட்டது. இந்த சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாமில் காரியாபட்டி மட்டும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பங்கேற்றனர்.**

**இந்த நிகழ்ச்சியில் காரியாபட்டி பேரூராட்சி கவுன்சிலர்கள் லியாகத்அலி, சங்கரேஸ்வரன், சரஸ்வதி பாண்டியராஜ், தீபா பாண்டியராஜ்,எஸ்.பி.எம் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் சண்முகம் , பணியாளர்கள் பாண்டியம்மாள் , சந்திரா, ஜெயராணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ‘காலங்களில் அவள் வசந்தம்’ திரைப்பட இசை வெளியீட்டு விழா




சென்னை, அக்டோபர் 16 2022: அறம் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் ஸ்ரீ ஸ்டுடியோஸ் தயாரிப்பில், இயக்குநர் ராகவ் மிர்தாத் இயக்கத்தில் கலகலப்பான காதல் கதையாக உருவாகியுள்ள திரைப்படம் ‘காலங்களில் அவள் வசந்தம்’. காதல் கதைகள் அரிதாகி வரும் தமிழ் சினிமாவில், காதலை மாறுபட்ட கோணத்தில் சொல்லும் கதையாக இப்படம் உருவாகியுள்ளது. புதுமுகம் கௌஷிக் ராம் இப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார். டாணாக்காரன் புகழ் அஞ்சலி நாயர் கதாநாயகியாக நடிக்கிறார். ஹெரோஷினி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். வர்கீஸ் மேத்தியூ, ஆர் ஜே விக்னேஷ், அனிதா சம்பத், ஸ்வாமிநாதன், சவுந்தர்யா, ஜெயா ஸ்வாமிநாதன் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள்.

இப்படத்தின் இசை விழா திரைபிரபலங்கள், படக்குழுவினர் கலந்து கொள்ள பத்திரிகை ஊடக நண்பர்கள் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவினில்.. தயாரிப்பாளர் சி வி குமார் பேசியதாவதுஞ்

இயக்குநரை எனக்கு 10 வருடமாக தெரியும் அட்டகத்தி நேரத்தில் என்னிடம் இந்த கதை சொன்னார். அவரிடம் இந்த கதையை படமெடுக்கலாம் என பேசிக்கொண்டிருந்தோம். மிக அழகான காதல் கதை இது. இந்தக் கால இளைஞர்கள் பற்றிய கதை. அனைவரும் படத்தில் அருமையாக செய்துள்ளார்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். இயக்குநர் ரவிக்குமார் பேசியதாவதுஞ்

சி வி குமார் சார் கதை தேர்வு செய்வதும் தயாரிப்பில் ஈடுபடுவதும் ஆச்சர்யம் தரும். அவர் புதுமுகங்களை ஊக்குவிப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. படக்குழு மிக அழகான திரைப்படத்தை எடுத்துள்ளார்கள். தொழில்நுட்ப குழுவினர் அருமையாக உழைத்துள்ளனர். அனைவருக்கும் வாழ்த்துகள். இயக்குநர் ராம்குமார் பேசியதாவதுஞ்

சி வி குமார் ஒரு படத்தில் சம்பந்தப்படுகிறார் என்றால் கண்டிப்பாக அந்தப்படம், கதை வித்தியாசமாக இருக்கும். இந்தப்படமும் பார்க்க அழகாக இருக்கிறது படம் வெற்றி பெற வாழ்த்துகள். நடிகர் ஆர் கே சுரேஷ் பேசியதாவதுஞ் சி வி குமார் இருப்பதால் கதைக்களம் நன்றாக இருக்கும். காலங்களில் அவள் வசந்தம் டைட்டிலே நன்றாக இருக்கிறது. இன்று தமிழ் சினிமா நன்றாக இருக்கிறது. தம்பி விஷ்வா இப்படத்தில் பங்குபெற்றுள்ளார். நாயகன் அழகாக இருக்கிறார். நாம் இருந்த இடத்தை மறக்க கூடாது, அதை இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப்படம் வெற்றி பெற வாழ்த்துகள் அனைவருக்கும் வாழ்த்துகள். இயக்குநர் கௌரவ் பேசியதாவதுஞ்

சி வி குமார் ஒரு விஷயத்தில் கை வைக்கிறார் என்றாலே அது பற்றி அனைத்தையும் அலசி விடுவார். லவ் படத்தில் நாயகன் நாயகி அழகாக இருக்க வேண்டும். இப்படத்தில் இருவரும் அழகாக இருக்கிறார்கள். டைட்டிலே பாஸிட்டிவாக நன்றாக இருக்கிறது. படம் அனைவருக்கும் வசந்தம் தரும், வாழ்த்துகள். நாயகி அஞ்சலி நாயர் பேசியதாவதுஞ்

இந்தப்படத்திற்காக என்னை தேர்ந்தெடுத்தற்கு நன்றி. ராதே கதாப்பாத்திரம் எனக்கு மிகவும் நெருக்கமானது. ஹரி மியூசிக் மிக அற்புதமாக வந்துள்ளது. கௌஷிக், ஹெரோஷினி எனக்கு மிக உதவியாக இருந்தார்கள். இப்படம் உங்களுக்கு கண்டிப்பாக பிடிக்கும் ஆதரவு தாருங்கள் நன்றி. நாயகி ஹெரோஷினி பேசியதாவதுஞ் என் டீமுக்கு முதல் நன்றி. அவர்களால் தான் இந்தப்படம் மிக அழகாக வந்துள்ளது. நாங்கள் அனைவரும் இன்னும் நெடுந்தூரம் பயணப்பட வேண்டும். அதற்கு உங்கள் ஆதரவு தேவை. விரைவில் உங்களை திரையில் சந்திக்கிறோம் நன்றி. இயக்குநர் ராகவ் மிர்தாத் பேசியதாவதுஞ்

என் அப்பா அம்மாவுக்கு நன்றி. என் மனைவிக்கு மிக நன்றி அவர்கள் சப்போர்டில் தான் நான் இங்கு இருக்கிறேன். ஸ்போர்ட்ஸில் லவ் ஆல் சொல்லி துவங்குவது போல் தான் இந்தப்படத்தை துவங்கியுள்ளேன். அன்பு தான் இந்தப்படத்தின் அடிப்படை. இந்தப்படத்தில் ஹரி மிக அற்புதமான இசையை தந்துள்ளார். கண்டிப்பாக இசை மிகப்பெரிய அளவில் பேசப்படும். இந்தப்படம் கல்யாணத்திற்கு பிறகான காதலை சொல்லும் படம் மெச்சூரிட்டியை புரிந்து கௌஷிக் மிக அற்புதமாக நடித்திருக்கிறார். அஞ்சலி நாயர், ஹெரோஷினி இருவரும் கண்டிப்பாக பாராட்டை பெறுவார்கள். தொழில் நுட்ப கலைஞர்கள் அனைவரும் மிகப்பெரிய அளவில் உழைத்துள்ளார்கள் அனைவருக்கும் என் நன்றிகள். இந்தப்படம் கண்டிப்பாக உங்களுக்கு பிடிக்கும் நன்றி. நடிகர் கௌஷிக் பேசியதாவதுஞ்

இங்கு வந்து வாழ்த்திய அனைவருக்கும் நன்றி. சின்ன வயதிலிருந்தே எனக்கு பொழுதுபோக்கு துறை மீது அதிகம் விருப்பம் இருந்தது. என் குடும்பம் எனக்கு மிகப்பெரும் உறுதுணையாக இருந்தார்கள் அவர்களுக்கு நன்றி. இயக்குநரின் 15 வருட கனவு இந்தப்படம். இந்தக்கனவை உங்களிடம் கொண்டு வந்து சேர்த்துள்ளோம். உங்கள் ஆதரவை தருவீர்கள் என நம்புகிறேன். நன்றி. ‘காலங்களில் அவள் வசந்தம்’ திரைப்படத்திற்கு கோபி ஜகதீஸ்வரன் ஒளிப்பதிவு செய்ய, அறிமுக இசையமைப்பாளர் ஹரி இசையமைக்க, லியோ ஜான் பால் படத்தொகுப்பு செய்திருக்கிறார். அறம் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் ஸ்ரீ ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள ‘காலங்களில் அவள் வசந்தம்’ திரைப்படத்தை தமிழகமெங்கும் விஸ் கொயர் எண்டர்டெயின்மெண்ட் வெளியிடுகிறது.

# யோகி பாபு நடிப்பில் ‘ஷூ‘ படம் ஷூ வடிவில் டைம் மெஷின்





சென்னை, அக்டோபர் 16 2022: காமெடியனாக திரையுவதற்கு வந்து தற்போது படங்களில் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகர் யோகி பாபு. ஷூ படத்தில் யோகி பாபு, திலீபன், ரெடின் கிங்சிலே, ஜார்ஜ் விஜய், விஜய் டிவி பாலா போன்றோர் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இவ்வளவு பேர் இருப்பினும் குழந்தைகளை சுற்றியே இக்கதை நகர்கிறது. ஷூ வடிவில் டைம் மெஷின் ஒன்றை கண்டுபிடிக்கிறார் திலீபன், அதனை சோதனை செய்யும் போது எதிர்பாராத விதமாக போலீசில் மாட்டிக் கொள்கிறார். மறுபுறம் ஒரு கும்பல் குழந்தைகளை விலைக்கு வாங்கி அவர்களை விபச்சாரத்திற்கு உட்படுத்துகிறது, மறுபுறம் தாய் இல்லாத குழந்தை குடிகார அப்பாவிடம் இருந்து கஷ்டப்படுகிறது. இவர்கள் மூன்று பேரையும் அந்த ஷூ ஒரு கட்டத்தில் இணைக்கிறது, பிறகு என்ன ஆனது என்பதே இப்படத்தின் கதை.

கல்யாண் இயக்கியுள்ள இப்படம் டெக்னிக்கலாக சிறப்பாக உள்ளது. படத்தில் உள்ள நடிகர்களைப் போலவே டெக்னீசியன்களும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவராக பார்த்து பார்த்து அமைத்துள்ளார். இசையமைப்பாளர் சாம் சி எஸ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். யோகி பாபு, ரெடின், பாலா ஆகியோர் இணைந்து வரும் காட்சிகள் நன்றாக இருந்தது.

தன் அம்மாவின் புகைப்படத்தை காண காலையிலிருந்து மாலை வரை காத்திருந்து கடைசியில் ஏமாற்றம் அடையும்போது அந்த குழந்தையின் நடிப்பு மிகவும் நன்றாக இருந்தது, படம் முழுவதும் எதார்த்தமான நடிப்பையே கொடுத்திருந்தார். ஷூ தான் படத்தில் முதன்மை கதாபாத்திரம். சாம் சிஎஸ் இசையில் பின்னணி இசையும் அம்மா பாடலும் ரசிக்கும்படியாக இருந்தது. 1 மணி நேரம் 52 நிமிடம் மட்டுமே ஓடும் இந்த கதை போர் அடிக்காமல் நகர்வது படத்திற்கு கிடைத்த வெற்றி.

குழுவினர்

தயாரிப்பாளர்: ஆர்.கார்த்திக் மற்றும் எம்.நியாஷ் எழுத்து & இயக்கம்: கல்யாண் ஒளிப்பதிவாளர்: ஜேக்கப் ரத்தினராஜ், ஜெமின் ஜோம் அய்யனேத் இசை: சாம் சி.எஸ்

எடிட்டர்: விஜய் வேலுக்குட்டி கலை: சுரேஷ் பாடல்கள்: முத்தமிழ் ஸ்டண்ட்: ராக் பிரபு நடிகர்கள்: ப்ரியா கல்யாண் - பிரியா யோகி பாபு - மாரி திலீபன் - திலீபன் ரெடின் கிங்ஸ்லி -டோனி கே பி ஒய் பாலா - பாலா மற்றும் ஆண்டனி தாஸ், டோனி, ஜார்ஜ் விஜய் மற்றும் செம்மலர்.

# வெற்றி பட இயக்குனர் தேசிய விருது பெற்ற இயக்குனர் சீனு ராமசாமி இயக்கத்தில் மாதம்பட்டி சினிமாஸ் தயாரிப்பில் மாதம்பட்டி ரங்கராஜ் நடிக்கும் புதிய படம்





சென்னை, அக்டோபர் 16 2022: மெஹந்தி சர்க்கஸ் திரைப்படத்தில் நடித்தவர் மாதம்பட்டி ரங்கராஜ். இளம் ஹீரோவாக தமிழ் சினிமாவில் திகழும் இவர், தற்போது பிரபல திரைப்பட இயக்குனர் திரு.சீனு ராமசாமியின் இயக்கத்தில் தமது அடுத்த திரைப்படத்தில் நடிக்க இருக்கிறார்.

முன்னதாக கேசினோ எனும் திரைப்படத்தில் நடித்துள்ள மாதம்பட்டி ரங்கராஜ், தற்போது நடிகர் யோகிபாபுவுடன் இணைந்து பெயரிடப்படாத மற்றுமொரு திரைப் படத்திலும் நடித்திருக்கிறார். இந்நிலையில்தான் இயக்குனர் சீனு ராமசாமி இயக்கத்திலான தம்முடைய அடுத்த திரைப்படத்தில் மாதம்பட்டி ரங்கராஜ் ஹீரோவாக நடிக்க இருக்கிறார்.

இயக்குநர் திரு.சீனு ராமசாமி இயக்கத்தில், விஜய் சேதுபதி நடித்த ‘மாமனிதன்’ திரைப்படம் கடைசியாக வெளியாகி நல்ல வரவேற்பையும், விமர்சகர்களின் நல்ல மதிப்பீடுகளையும் பெற்றது. இதனைத் தொடர்ந்து தற்போது திரு.சீனு ராமசாமி இயக்கத்திலான நல்ல ஒரு காதல் கதையில் மாதம்பட்டி ரங்கராஜ் நடிக்கவிருக்கிறார்.

இந்த படத்தின் படப்பிடிப்பு பாண்டிச்சேரி, சென்னை மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறவிருக்கிறது. வரும் டிசம்பரில் தொடங்கும் இந்த திரைப்படத்தின் படப்பிடிப்பு உள்ளிட்ட இதர விபரங்கள் விரைவில் வெளியாகவிருக்கின்றன. இப்படத்தின் இதர தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர், நடிகையர் தொடர்பான தேர்வுகள் நடைபெற்று வரு நிலையில், அவை குறித்த இதர அறிவிப்புகள் விரைவில் வெளியாகும்.

# இயக்குனர் லெனினிடம் பாராட்டு பெற்ற ‘ஒருநாள்’ குறும்படம்



சென்னை, அக்டோபர் 16 2022: இயக்குநர் அருண் எழுதி இயக்கியுள்ள குறும்படம் ‘ஒருநாள்’. சமீபத்தில் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர் சங்கமும் பெங்களூர் இன்னோவேடிவ் பிலிம் இன்டர்நேஷனலும் இணைந்து நடத்திய குறும்பட போட்டியில் இந்த குறும்படம் கலந்து கொண்டது. இந்த போட்டியில் 500க்கும் மேற்பட்ட படங்கள் கலந்து கொண்ட நிலையில் அதில் சிறந்த 25 படங்களில் ஒன்றாக இந்த ‘ஒரு நாள்’ குறும்படம் தேர்வு செய்யப்பட்டு திரையிடப்பட்டது.

படத்தை பார்த்த திரைப்படக் கலைஞர்களும் சிறப்பு விருந்தினர்களும் தங்களது கைத்தட்டல்கள் மூலம் இந்த படத்திற்கு பாராட்டுக்களை தெரிவித்தனர். இந்த குறும்படத்தில் லயோலா கல்லூரி மாணவரான யஸ்வந்த் மற்றும் நடனக் கலைஞர் தீபிகா இருவரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இவர்களது நடிப்பு படம் பார்த்த அனைவராலும் பாராட்டப்பட்டது.

இந்த குறும்படத்திற்கு பெருமாள் மற்றும் அம்மு முத்து இருவரும் ஒளிப்பதிவு செய்துள்ளனர். அர்ஜுன் இசையமைக்க, படத்தொகுப்பை சிவாவும், ஒலிக்கலவையை செந்திலும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த குறும்படத்தை பார்த்த இயக்குநர், எடிட்டர் பி.லெனின் இந்த படத்தை சிலாகித்து பாராட்டியதுடன் தயாரிப்பாளர் தனஞ்செயன் நடத்திவரும் ஜிளிதிஜிகி அகாடமியில் இந்த குறும்படத்தை திரையிட்டு மாணவர்களைப் பார்க்க வழிவகை செய்தார். அது மட்டுமல்ல இயக்குநர் அருண் வெள்ளித்திரையில் படம் இயக்குவதற்காக அவருக்கு சில தயாரிப்பாளர்களையும் அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறார். அதுகுறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

# இயக்குனர் சீனு ராமசாமிக்கு இன்ப அதிர்ச்சி தந்த முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, அக்டோபர் 16 2022: அனைவருக்கும் அன்பான வணக்கம் எழுதுவது சீனு ராமசாமி

எனக்கு ஆச்சர்ய பரிசு தர இது நாள்வரை நான் எழுதிய கவிதைகள் அத்துணையும் சேகரித்து எனக்குத் தெரியாமல் நூலாக்கி 'சொல்வதற்கு சொற்கள் தேவையில்லை'

என அந்நூலுக்கு என் கவிதையையே தலைப்பிட்டு பிறந்தநாள் பரிசாக மனைவி தர்ஷணாவும் மகள்களும் தந்தனர்.

இந்நூலுக்கு வாழ்த்துமடல் மாண்புமிகு நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கணவனுக்கு ஆச்சர்யமூட்டும் பரிசு தருவதற்காக ஒரு மனைவி தொகுத்த கவிதை

தொகுப்பிற்கு ஊக்கமளித்து பாராட்டி ஒரு கடிதம் தந்து வாழ்த்திய உங்கள் உயர்ந்த உள்ளம் பற்றி நினைப்பதா? அல்லது என் போன்ற கலைஞர்களுக்கு நீங்கள் தரும் இதயப்பூர்வமான அன்பை எண்ணி நெகிழ்வதா எனத் தெரியவில்லை அய்யா? என்னால் இதை முதலில் நம்ப முடியவில்லை.

முதல்வரின் கனிந்த இதயத்திற்கு முன் வணங்கி நிற்கிறேன். மேலும் அணிந்துரை தந்தவர் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள்.. கவிஞரும் தன் பங்களிப்பாக ஆயிரம் மலர்களை சொற்களாக்கி சூடிவிட்டார்.

உங்கள் கருத்த கைகளை முத்தமிடுகிறேன் கவிஞரே.. கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் அம்மா எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் சத்யபாமா பல்கலைக்கழக வேந்தர் மரிய சீனாஜான்சன் என் வாழ்நாளில் சிறப்பான நினைவு பரிசினை தந்த உங்களுக்கு இதய நன்றிகள்.

நூலினை வீட்டிற்கே வந்து வெளியிட்டவர் நடிகர் மோகன் அவர்கள் அதுவும் தீடீரென்று.. என் காதலுக்குரியவர் அவர் மோகன் சாருக்கு இதய நன்றிகள். ஆச்சர்யம் அதிர்ச்சியாயிற்று. திக்குமுக்காடிப்போனேன். வாழ்த்திய அனைவருக்கும் அன்பு நன்றி வணக்கம். அன்பன் சீனு ராமசாமி.

# ரவு கொட்டாரக்கரா தலைமையில் பிலிம்சேம்பர் நிர்வாகிகள் பதவி ஏற்றனர்! தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை என்றழைக்கப்படும் பிலிம்சேம்பருக்கு தேர்தல் நடைபெற்றது.




சென்னை, அக்டோபர் 16 2022: தலைவராக ரவி கொட்டாரக்கரா, துணைத்தலைவர்களாக ஜி.பி. விஜயகுமார், டி.எஸ். ராம்பிரசாத், கே.எஸ். ராமகிருஷ்ணா, செயலாளர்களாக டி.ஏ.அருள்பதி, கிருஷ்ணாரெட்டி, பொருளாளராக என்.இராமசாமி (தேனாண்டாள் முரளி) செயற்குழு உறுப்பினர்களாக எஸ்.தாணு, கே.பிரபாகரன், எஸ். கதிரேசன், ஆர்.மாதேஷ், எம்.கபார், என்.விஜயமுரளி, மதுரை ஷாகுல்அமீது உட்பட 44 செயற்குழு உறுப்பினர்களாக பதவி ஏற்றனர்.

தேர்தல் அதிகாரியான சி.கல்யாண் பணியாற்றினார். பில்டிங் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி பெற உறுதுணையாக இருந்த திரைப்பட தயாரிப்பாளரும், நடிகரும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் சேம்பர் முன்னாள் தலைவர் காட்ரகட்ட பிரசாத், ஜாகுவார் தங்கம், உட்பட ஏராளமான தயாரிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்கா 'எம்பவர் 2022' ஐ வழங்குகிறது இந்தியாவின் முதன்மையான உதவி தொழில்நுட்ப (எ டி) மாநாடு, 10 X முன்முயற்சியின் ஒரு பகுதி




சென்னை, அக்டோபர் 16 2022: ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க் (ஐஐடிஎம்ஆர்பி), இந்தியாவின் முதல் பல்கலைக்கழக அடிப்படையிலான ஆராய்ச்சிப் பூங்கா மற்றும் இந்தியாவின் முன்னணி டீப்-டெக் ஸ்டார்ட்-அப் மையமான ஐஐடி இன்குபேஷன் செல், இந்தியாவின் முதன்மையான உதவி தொழில்நுட்ப (ஏடி) மாநாட்டின் 10-ன் ஒரு பகுதியாக 'எம்பவர் 2022' ஐ நடத்துகிறது. X முன்முயற்சி, 13 அக்டோபர் முதல் 15 அக்டோபர் 2022 வரை ஐ ஐ டி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவில்.

எம்பவர் 2022 இன் 5வது பதிப்பை உலக சுகாதார நிறுவனத்தில் உதவி தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ சாதனங்களுக்கான அணுகல் பிரிவின் தலைவர் (எ.ஐ) திரு. சப்பல் கஸ்னாபிஸ், சைபர் மீடியா குழுமத்தின் தலைவர் திரு. பிரதீப் குப்தா மற்றும் தலைவர் பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா ஆகியோர் தொடங்கி வைத்தனர். - ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், ஐஐடிஎம் இன்குபேஷன் செல் & ஆர்டிபிஐ.

நாள் மாநாடு உள்நாட்டு உதவி தொழில்நுட்பத்தின் (ஊனமுற்றோர் மற்றும் மூத்த குடிமக்களுக்கான தொழில்நுட்பம்) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் தொழில்துறை, கல்வித்துறை, ஸ்டார்ட் அப்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக பிரகாசமான மனதை ஒன்றிணைக்கும். தனி நபர்களை ஊக்குவிக்கவும், இந்தியாவில் ஒரு வலுவான, புதுமை உந்துதல் எ டி சுற்றுச்சூழல் அமைப்பிற்கு ஒத்துழைக்கவும்.

எம்பவர் 2022 ஆனது, எ டி இல் உள்ள 20+ தொழில் வல்லுநர்களின் நிபுணர் பேச்சுக்கள் உட்பட, 19 பட்டறைகள், எ டி இல் உள்ள தொழில் வல்லுனர்களை ஆழமான உரையாடல்களைத் தூண்டுவதற்கும் பங்கேற்பாளர்களுக்குக் கைகொடுக்கும் வகையில் கவனமாகத் தொகுக்கப்பட்ட 3-நாள் மாநாட்டில் பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டிருக்கும். -ஆன், எ டி சவால்கள் மற்றும் வாய்ப்புகளில் ஆழ்ந்த அனுபவம். இந்தியாவில் எ டி நிலப்பரப்பு பற்றிய விழிப்புணர்வின் ஒட்டுமொத்த கருப்பொருளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு பட்டறையும் மேம்படுத்தும் மாற்று தொடர்பு, தொட்டுணரக்கூடிய கிராபிக்ஸ் முதல் உலகளாவிய மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட உதவி தொழில்நுட்பத்தை உருவாக்குவது வரையிலான தலைப்புகளை உள்ளடக்கியது.

ஐ ஐ டி எம் ஆர் பி இன் 10X எ டி முன்முயற்சியானது - டிரைவிங் மலிவு மற்றும் தரமான உதவி தொழில்நுட்பம் (டி எ கியூ எ டி) என அழைக்கப்படுகிறது. தொடக்க விழாவைத் தொடர்ந்து இந்த முன்முயற்சிக்கு ஏற்ப, எ டி இல் உள்ள இந்திய ஸ்டார்ட் அப்களின் ஆன்லைன் தரவுத்தளமும், விரிவான எ டி ஸ்டார்ட் அப் கண்காட்சியும் (90 ஸ்டார்ட்அப்கள் & கண்டுபிடிப்பாளர்கள்) வெளியிடப்படும்.

இந்தியா முழுவதிலும் இருந்து 100+ எ டி ஸ்டார்ட்-அப்கள் மற்றும் புதுமையாளர்கள் ஒரே கூரையின் கீழ் வந்து தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவார்கள். இது சந்தையில் கிடைக்கும் எ டி தயாரிப்புகளின் விரிவான பார்வையை வழங்குவது மட்டுமல்லாமல், முக்கிய காரணிகளை நிவர்த்தி செய்வதற்கு வழி வகுக்கும்: கிடைக்கும் தன்மை, மலிவு மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு. எம்பவர் 2022, அசிஸ் டெக் பவுண்டேஷன் (எ டி எஃப்) வழங்கும் இந்தியாவின் முதல் உதவி தொழில்நுட்ப விருதுகளையும் வழங்கும்.

எம்பவர் இன் முக்கிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இந்தியாவிலும் உலகளாவிய தெற்கிலும் வளர்ந்து வரும் உதவி தொழில்நுட்பத் துறைக்கு பங்களிக்க மாணவர் வடிவமைப்பு சவால் நடத்தப்பட்டது. 80 பதிவு செய்யப்பட்ட மாணவர் அணிகளில் இருந்து மொத்தம் 12 இறுதிப் போட்டியாளர்கள் நடுவர் குழுவின் முன் ஆஜராக தேர்வு செய்யப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிகரமான வடிவமைப்புகளும் முன் அடைகாப்பிற்காக பரிசீலிக்கப்படலாம்.

ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், ஐஐடி இன்குபேஷன் செல் & ஆர்டிபிஐ ஆகியவற்றின் தலைவர் பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா கூறுகையில், "ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், 10 எக்ஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியாவை உதவி தொழில்நுட்பத்தில் உலக அளவில் முன்னணியில் சேர்ப்பதற்கான ஒரு லட்சிய பார்வையை தொடர்கிறது. 'ஊனமுற்றோர்' மற்றும் முதியோர் மருத்துவம், ஆரோக்கியமான, உற்பத்தி, சுதந்திரமான மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வாழ அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தியா ஒரு பெரிய சந்தையாகும், மேலும் இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் வணிகமயமாக்கலின் போது உற்பத்தியின் அளவு இந்த இடைவெளியைக் குறைக்க உதவும்.

"இந்த மாநாட்டில் நாம் பெறும் வேகத்தைத் தட்டிக் கொண்டு, இந்த வகை ஸ்டார்ட்-அப்களை ஊக்குவித்தல் மற்றும் அடைகாப்பதன் மூலம் மலிவு, அணுகக்கூடிய மற்றும் தரமான உள்நாட்டு எ டி தயாரிப்புகளை உருவாக்குவதற்கான எங்கள் முயற்சிகளை விரைவுபடுத்துவோம். ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க் கொள்கைகளிலும் பணியாற்றும் மற்றும் பார்வையை ஆதரிக்க விரும்பும் நன்கொடையாளர்களை எளிதாக்கும் மற்றும் அதை வாங்க முடியாத மக்களுக்கு சாதனங்களைப் பெற உதவும்," என்று அவர் மேலும் கூறினார்.

## விஜய் மக்கள் இயக்கம் சார்பில் தமிழ் கலாச்சாரமான சிலம்பாட்டம் பயிற்சி வகுப்பு



சென்னை, அக்டோபர் 16 2022: தளபதி விஜய் அவர்களின் பிறந்த நாள் அன்று தமிழகத்தில் முதன்முறையாக தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் தமிழ் கலாச்சாரமான சிலம்பாட்டம் பயிற்சி வகுப்பு ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி நகர தலைமையினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை 96 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். அனைவருக்கும் சீருடை வழங்கப்பட்டு பயிற்சி அளிக்கும் சிலம்பாட்ட ஆசிரியர் திரு.அஜய் அவர்களுக்கு திமிரி நகர தலைமை உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து மாதந்தோறும் 20 ஆயிரம் சம்பளமாக வழங்கப்படுகிறது. இன்று சென்னை பனையூரில் உள்ள அகில இந்திய தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்க அலுவலகத்தில் பொதுச் செயலாளர் புஸ்ஸி என். ஆனந்து அவர்கள் முன்னிலையில் பயிற்சி பெறும் அனைவரும் சிலம்பாட்டத்தை செயல்படுத்தி காட்டினார்கள். மேலும் தளபதி அவர்களின் உத்தரவின்படி ராணிப்பேட்டை மாவட்டம் தொண்டரணி தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் திரு. மணிகண்டன் அவர்கள் ஆட்டோ வழங்குவதற்கு ரூ. 1,20,000 முன்பணம் செலுத்தி, தொண்டரணி தலைவர் திரு. ரமேஷ் அவர்கள் முன்னிலையில் திரு. நாகராஜ் என்பவருக்கு பொதுச் செயலாளர் புஸ்ஸி என். ஆனந்து அவர்கள் இலவச ஆட்டோவினை வழங்கினார். மேலும் ஆட்டோ தொழில் செய்து மாததவனை ரூ.7,500யை திரு. நாகராஜ் அவர்கள் செலுத்திக் கொள்வார். இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் திரு. மோகன் எம் சி, மாவட்ட செயலாளர் திரு. காந்திராஜ் எம் சி, இளைஞரணி தலைவர் திரு. வினோத், மாணவரணி தலைவர் திரு. தீனா மற்றும் மக்கள் இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஆன்லைன் விளையாட்டுக்கு அடிமையாதல்: கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான மனநலப் பிரச்சனை

### டாக்டர். ஆர் வசந்த், மனநல மருத்துவர், ஃபோர்டிஸ் மலர், அடையாறு



சென்னை, அக்டோபர் 16 2022: கொரோனா தொற்று பல விஷயங்களுக்கு அடிமையாவதற்கு காரணமாகி விட்டது. வீடியோ கேம் அல்லது ஆன்லைன்/இணைய விளையாட்டு அப்படிப்பட்ட ஒன்று. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, இணைய விளையாட்டுகள் மீதான காதல் அவர்களின் வாழ்க்கையை அவர்களிடம் இருந்து பறித்துள்ளது. உலக சுகாதார அமைப்பு அதிகாரப்பூர்வமாக மனநலக் கோளாறை வகைப்படுத்தியுள்ளது: கேமிங் கோளாறு. பொழுதுபோக்கு மற்றும் ஒய்வு நேரத்தின் பொழுது போக்காக இருந்து வந்த இந்த ஆன்லைன் விளையாட்டுக்கள் விளையாடுபவர்களிடம் எதிர்மறையான மனநல விளைவுகளை அதிகரித்துள்ளது. டாக்டர் ஆர் வசந்த், ஃபோர்டிஸ் மலர், மனநல மருத்துவர், தற்போதைய இணைய விளையாட்டின் மூலம் ஏற்படும் மனநல கோளாறுகளை மனதில் வைத்து கூறுகையில், கடுமையாக விளையாட்டின் மீது பற்றுள்ளவர்களின் நடத்தையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறுகிறார். கேமிங் அடிமையாகுதல் தொடர்பாக கவனிக்க வேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால் எதிர்மறை எண்ணங்கள், ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை, தனிமை விரும்புதல், மனச்சோர்வு மற்றும் தற்கொலை எண்ணம் ஆகியவை அடங்கும். வழக்கமான வேலைகள் அல்லது வாழ்க்கை நலன்களை விட கேமிங்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் அளவிற்கு இணைய விளையாட்டை விளையாடுவது. இணைய வீடியோ விளையாட்டு போதை மன ஆரோக்கியத்தை பாதிக்கிறது:

பயன்பாடு அதிகமாகி, கட்டுப்பாட்டை மீறும் போது, இந்தப் பழக்கம் ஒரு போதையாக மாறுகிறது. விளையாடுபவர் நிறுத்த முடியாமல் தொடர்ந்து விளையாடுவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். எப்பொழுதும் விளையாண்டு கொண்டே இருக்கும் நிலை உணர்வு மற்றும் உடல் ஆரோக்கியத்தை பல வழிகளில் பாதிக்கலாம், மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள மற்ற நோய்களுக்கும் வழி வகுக்கும்

- உடல் பருமன், இரத்த அழுத்தம், இரண்டாம் நிலை நீரிழிவு நோய் அதிகரிப்பு
- சமூக ஈடுபாடு இல்லாமை
- அதிகரிக்கும் வன்முறை நடத்தை
- வலிப்பு மற்றும் மீண்டும் மீண்டும் காயங்கள் ஏற்படுத்திக் கொள்வது
- தனிப்பட்ட வளர்ச்சிக்கு இடமின்மை
- எ டி எச் டி (குழந்தைகளில் நரம்பியல் வளர்ச்சிக் கோளாறு) அதிகரிக்கும் வாய்ப்புகள்
- எரிச்சல் மற்றும் பணிகளை முடிப்பதில் கவனம் இல்லாமை

இணைய விளையாட்டின் நிலைகள்:

கேமிங்கில் மூன்று வெவ்வேறு நிலைகள் உள்ளன என்று டாக்டர் கூறுகிறார். முதல் நிலை விளையாட்டுத்தனமான வகையைச் சேர்ந்தது, இங்கு அந்த நபர் வேடிக்கைக்காக மட்டுமே விளையாடுகிறார். இரண்டாவது கட்டத்தில், மன அழுத்தம், சோகம் மற்றும் கவலை போன்ற எதிர்மறை உணர்ச்சிகளை அகற்ற ஒரு நபர் நீண்ட நேரம் விளையாட்டில் ஈடுபடுவதைக் காணலாம். மூன்றாம் கட்டத்தில், விளையாட்டு வேடிக்கைக்கான விளையாட்டாக இருக்காது மற்றும் எதிர்மறை உணர்ச்சிகளை அகற்றுவதர்க்கவும் அல்ல. இந்த கட்டத்தில், ஒரு நபர் பெரும்பாலும் மனச்சோர்வடைந்தவராகவும், திசையற்றவராகவும், வாழ்க்கைக்கு அர்த்தம் அல்லது நோக்கம் இல்லாமல் இருப்பார்.

கேமிங் கோளாறுக்கான சிகிச்சை

மனச்சோர்வு, பதட்டம், இருமுனையப் பிறழ்வு அல்லது பிற மனநலம் தொடர்பான பிரச்சனை ஆகியவற்றுடன் கண்டறியப்பட்ட நபர்களுக்கு மனச்சோர்வு அல்லது பதட்ட எதிர்ப்பு மருந்துகளுடன் நடத்தை சிகிச்சை தேவைப்படலாம். போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஒரு காரணியாக இருந்தால், நோயாளிக்கு மருந்து அல்லது ஆல்கஹால் துஷ்பிரயோகத்திற்கு சிறப்பு சிகிச்சையைத் தரலாம். போதைப்பொருளின் தீவிரத்தைப் பொறுத்து, தீவிர வெளிநோயாளர் திட்டங்கள் மற்றும் பகுதி உள்நோயாளி திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிகிச்சை சிறந்த தீர்வுகளை வழங்குகிறது.

புலனுணர்வு சார்ந்த நடத்தை சிகிச்சை, குடும்ப சிகிச்சை, ஊக்கமளிக்கும் நேர்காணல், தீர்வுகள்-மையப்படுத்தப்பட்ட சிகிச்சை மற்றும் இவற்றின் கூட்டு சிகிச்சை உட்பட பல சிகிச்சைகள் மருத்துவ உதவியை நாடுபவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகள், மருத்துவ விரிவுரைகள், நேர்மறை விளையாட்டுகளில் ஈடுபடுதல் ஆகியவை நோயாளிகளுக்கு பொதுவாக பரிந்துரைக்கப்படும் சிகிச்சைகள் ஆகும்.

தியானம் செய்வது, உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது அல்லது விளையாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்பது ஆகியவை போதைப்பொருளின் தீவிரத்தை குறைக்கலாம் என்று மருத்துவர் பரிந்துரைக்கிறார். திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவது ஒரு தனிநபரின் அறிவாற்றலை வளர்க்கும். பொழுது போக்கு ஒரு போதையாக மாறும் போது விஷயங்கள் கட்டுப்பாட்டை மீறும் என்று மருத்துவர் எச்சரிக்கிறார்.

இணைய விளையாட்டு நவீன பொழுதுபோக்கின் வடிவமாகும். மிதமான மற்றும் கட்டுப்பாட்டுடன் விளையாடும் போது அவை மன அழுத்தத்தை குறைக்கின்றன, இது பெரும்பாலும் எதிர்மறையான விளைவுகளுடன் தொடர்புடையது. இந்த விளையாட்டில் விளையாடும் நேரத்தின் அளவு ஒரு முக்கியமான காரணியாகும். அதிக நேரம் விளையாடுவது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே மருத்துவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கிறார்கள், குறிப்பாக இது மற்ற அன்றாட நடவடிக்கைகள் மற்றும் கேமிங் நடத்தை முறைக்கு காரணமாக இருக்கும் சமூக செயல்பாடுகளை பாதிக்கும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். விஷயங்கள் கட்டுப்பாட்டை மீறினால், ஒரு நிபுணரிடம் உதவி பெறுவது எப்போதும் நல்லது, என்று டாக்டர் ஆர் வசந்த் முடிக்கிறார்.

## விஜய் கனிஷ்கா நடிக்கும் ஹிட்லிஸ்ட் படப்பிடிப்பு துவங்கியது



சென்னை, அக்டோபர் 16 2022: உலக நாயகன் கமல்ஹாசன் நடித்த தெனாலி மற்றும் சமீபத்தில் வெளியாகி வரவேற்பை பெற்ற கூகுள் குட்டப்பா ஆகிய படங்களை தொடர்ந்து இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமாரின் ஸிரி சிமீறீறீஷூறீஷ்வீபீவ நிறுவனத்தின் மூன்றாவது படைப்பாக உருவாகிறது 'ஹிட்லிஸ்ட்' திரைப்படம்.

குடும்பப்பாங்கான, உணர்வு பூர்வமான படங்களை இயக்குவதற்கு பெயர்பெற்ற இயக்குனர் விக்ரமனின் மகன் விஜய் கனிஷ்கா இந்த படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார்.

இயக்குநர்கள் சூர்யகதிர், கார்த்திகேயன் இணைந்து இயக்கும் இந்த படத்தில் நடிகர் சரத்குமார் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

மேலும் இந்த படத்தில் கே.எஸ்.ரவிக்குமார், சித்தாரா, முனீஸ்காந்த், ரெடின் கிங்ஸ்லி, அபிநயா, கேஜிஎப் புகழ் கருடா ராமச்சந்திரா, மைம் கோபி மற்றும் அனுபமா குமார் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடிக்கின்றனர்.

ராம்சரண் ஒளிப்பதிவு செய்யும் இந்தப்படத்தின் படத்தொகுப்பை ஜான் மேற்கொள்ள, கலை வடிவமைப்பை அருண் கவனிக்கிறார்.

நேற்று விஜய் கனிஷ்காவின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த படத்தின் படப்பிடிப்பு துவங்கப்பட்டு விஜய் கனிஷ்கா சித்தாரா ஆகியோர் இணைந்து நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன.

இந்தப்படம் அனைத்து தரப்பினரையும் கவரும் வகையில் ஜனரஞ்சகமாக, காமெடி ஆக்சன் கமர்ஷியல் என அனைத்து அம்சங்களும் நிறைந்த திரைப்படமாக உருவாகிறது.

# அப்போலோ எலும்பியல் நிறுவனம் (அப்போலோ இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆர்த்தோபீடிக்ஸ் 370 ரோபோட்டிக் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது




சென்னை, அக்டோபர் 16 2022: அப்போலோ எலும்பியல் நிறுவனம் (அப்போலோ இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆர்த்தோபீடிக்ஸ், மூட்டு மாற்று சிகிச்சைக்கான பிரத்யேக மையமாகத் திகழ்ந்து வரும் சூழலில் இந்த மையம் தொடங்கப்பட்ட பத்து மாதங்களில் 370 ரோபோட்டிக் எலும்பியல் அறுவை சிகிச்சை செயல்முறைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளது. அப்போலோ இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆர்த்தோபீடிக்ஸ் ஜனவரி 2022 முதல் அதிநவீன குறைந்தபட்ச ஊடுருவல் கொண்ட ரோபோடிக் அறுவை சிகிச்சை தொழில்நுட்பத்தின் மூலமாக சிகிச்சை வழங்கத் தொடங்கியது. 2025 -ம் ஆண்டில் 60 மில்லியன் (6 கோடி) நோயாளிகளுடன், உலகிலேயே கீல்வாத பாதிப்பு எனப்படும் மூட்டு முழங்கால் பாதிப்பு அதிகம் கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆஸ்டியோஆர்த்ரிடிஸ் எனப்படும் கீல்வாத பாதிப்பு உலகளாவிய கவலையாக மாறி வருவதுடன் இந்த பாதிப்புத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அத்துடன் முழங்கால் மூட்டு வலி, ஒட்டுமொத்தமாக பல பாதிப்புகளுக்கும் காரணமாக அமைகிறது. இந்தச் சூழலில் ரோபோடிக் உதவியுடன் கூடிய தொழில்நுட்பம் போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் முழங்கால் மூட்டு சிகிச்சையில் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன. ரோபோடிக் முறையிலான மூட்டு மற்றும் இடுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் வழக்கமான அம்சத்திற்கு மாறாக அதிக துல்லியம் மற்றும் கணிசமான குணம் போன்ற மேம்படுத்தப்பட்ட அம்சங்களை நோயாளிகளின் மத்தியில் ஏற்படுத்தி சிறந்த விளைவுகளைக் கொடுக்கின்றன.

அப்போலோ மருத்துவமனையின் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் மதன் மோகன் ரெட்டி இது குறித்துக் கூறுகையில், "ரோபோ மூலம், ஒவ்வொரு முறையும், துல்லியமான முறையில் நோயாளிகளுடைய எலும்பு அமைப்பு முறைகளை முதலில் ஒரு மெய்நிகர் முப்பரிமாண (3டி) மாதிரியில் பார்த்து பின்னர் அறுவை சிகிச்சை அரங்கிலும் பார்த்து சிறப்பான சிகிச்சையை மேற்கொள்ள முடியும். கையால் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சையுடன் ஒப்பிடும்போது ரோபோடிக் உதவியுடனான அறுவை சிகிச்சையில் அதிக பலன்கள் உள்ளன. நோயாளிகளின் மேம்பட்ட ஆரம்ப கட்ட செயல்பாடு, அறுவை சிகிச்சைக்குப் பின் குறைந்த வலி, வலி நிவாரணிகளுக்கான தேவைக் குறைவு, விரைவான குணம் மற்றும் நோயாளிக்கு மிக அதிக திருப்தி போன்ற பலன்கள் இந்த ரோபோட்டிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மூலம் ஏற்படுவதாக பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. வழக்கமான முழங்கால் மாற்று அறுவை சிகிச்சையின் வெற்றி விகிதம் சுமார் 90 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை உள்ளது. ஆனால் ரோபோடிக் உதவியுடனான அறுவை சிகிச்சைகளில், வெற்றி என்பது 100 சதவீதமாக உள்ளது. அத்துடன் நோயாளிகள் விரைவாக குணமடைவதுடன் அந்த நிவாரணம் நீண்ட காலம் நீடித்து நிற்கிறது." என்றார்.

அப்போலோ மருத்துவமனை குழுமத்தின் செயல் துணைத் தலைவர் ப்ரீத்தா ரெட்டி கூறுகையில், "அப்போலோவில், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக =புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தி அடுத்த தலைமுறை செயல்முறைகளை நோயாளிகளுக்கு வழங்கும் விதமாக அதிநவீன மருத்துவ தொழில்நுட்பங்களை நாங்கள் உடனுக்குடன் கொண்டு வருகிறோம். 2022-ம் ஆண்டில் அப்போலோவில் ரோபோடிக் எலும்பியல் சிகிச்சை நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது நோயாளிகள், மூட்டு மற்றும் முழங்கால் நோய்களில் இருந்து எளிதில் குணமடைய உதவுவதோடு, விரைவாக குணமடையவும் உதவுகிறது. இந்த மையம் ஜனவரி 2022 முதல் ஏற்கனவே 370 ரோபோ'டிக் முழங்கால் மாற்று சிகிச்சை நடைமுறைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் இந்தப் பிரிவில் மிகவும் அதிக சிகிச்சைகளை மேற்கொள்ளும் மையமாக இது மாறியுள்ளது. டாக்டர் மதன் மோகன் ரெட்டி மற்றும் அவரது குழுவினர், இப்போது தமிழ்நாட்டில் அதிகபட்ச ரோபோட்டிக் முழங்கால் மாற்று சிகிச்சைகளைச் செய்த பெருமையைப் பெற்றுள்ளனர்." என்றார்.

# ப்ராட் & விட்னி மற்றும் என் எ எ ஈ ஈ உலகளாவிய ஈ-ஸ்டெம் விருதுகளின் தொடக்க வெற்றியாளர்களை அறிவித்தனர், வெற்றியாளர்களில் இரண்டு இந்திய அரசு சாரா நிறுவனங்கள் ஆகும்




சென்னை, அக்டோபர் 16 2022: பிராட் & விட்னி மற்றும் சுற்றுச்சூழல் கல்விக்கான வட அமெரிக்க சங்கம் (என் எ எ ஈ ஈ) இன்று முதல் பிராட் & விட்னி குளோபல் ஈ-ஸ்டெம் விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்தது. பிராட் & விட்னியின் தலைமை மாற்றம் மற்றும் மூலோபாய அதிகாரி சதீஷ் குமார் குமாரசிங்கம், 11 நாடுகளில் உள்ள 13 இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு மொத்தம் $250,000 மானியங்களை வழங்கினார். ஒவ்வொரு குழுவும் சுற்றுச்சூழல், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (ஈ-ஸ்டெம்) கல்வித் திட்டங்களை 11-18 வயதுக்குட்பட்ட குறைவான மாணவர்களுக்கான முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.

"பிராட் & விட்னி, விமானத்தின் எதிர்காலத்தை மாற்றுவதற்கும், விமானத்தின் கார்பன் தடம் மற்றும் சுற்றுச்சூழலின் மீதான தாக்கத்தை குறைப்பதற்கும் நிலையான உந்துவிசை தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் உறுதியாக உள்ளது" என்று நிகழ்ச்சியின் சாம்பியனான குமரசிங்கம் கூறினார். "அடுத்த தலைமுறை கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் நிலைத்தன்மை நிபுணர்களை ஊக்குவிக்கும் மற்றும் ஆதரிக்கும் இந்த ஊக்கமளிக்கும் உலகளாவிய இலாப நோக்கற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். இளைஞர்களுக்கு ஸ்டெம் மூலம் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் மற்றும் திறனை வளர்க்கும் அதே வேளையில் இந்த ஒவ்வொரு நிறுவனமும் வளர இந்த வாய்ப்பு அனுமதிக்கும்." ப்ராட் & விட்னி மற்றும் என் எ எ ஈ ஈ ஆகியவற்றின் நீதிபதிகள் குழு, மே மற்றும் ஜூலை 2022 க்கு இடையில் விண்ணப்பித்த 40 நாடுகளில் உள்ள 175 விண்ணப்பதாரர்களின் தொகுப்பிலிருந்து பெறுநர்களைத் தேர்ந்தெடுத்தது. என் எ எ ஈ ஈ2022 ஆண்டு சர்வதேச மாநாட்டின் போது, மாற்றத்திற்கான கல்வி என்ற கருப்பொருளுடன், டியூசன், அரிசோனாவில் இன்று வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து, தமிழ்நாட்டின் சென்னையை மையமாகக் கொண்ட ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமான பூமி மற்றும் உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஹரிததாரா ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளை (எச் ஆர் டி ஈ எஃப்) ஆகியவை தலா $15000 மற்றும் $5000 மானியங்களை வென்றன. பூமி பள்ளி திட்டங்களை ஒருங்கிணைக்கிறது. இது நேரில் மற்றும் மெய்நிகர் கற்றல் இரண்டின் கலவையின் மூலம், இந்தியாவின் தொலைதூர மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட குழந்தைகளுக்கு ஸ்டெம் செயல்பாடுகள் மற்றும் கற்றல் வாய்ப்புகளை வழங்குகிறது. சுற்றுச்சூழல் மேலாண்மை, நீர், ஆற்றல், கழிவுகள், காலநிலை மாற்றம் மற்றும் போக்குவரத்து சிக்கல்கள் பற்றிய திட்டங்களுடன் எச் ஆர் டி ஈ எஃப் மாணவர்களை ஈடுபடுத்துகிறது.

# குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றியதற்காக எஸ் பி எம்-க்குப் பிறகு ஜெ ஜெ எம் சர்வதேசப் பாராட்டுகளைப் பெற்றது

சென்னை, அக்டோபர் 16 2022: குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதில் ஸ்வச் பாரத் அபியானின் வெற்றிக்குப் பிறகு, மத்திய அரசின் லட்சியத் திட்டமான ஜல் ஜீவன் மிஷன், சர்வதேச அளவில் புதிய பரிமாணங்களை உருவாக்குவதில் வெற்றி பெற்று வருகிறது. கிராமப்புறங்களில் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் உலக அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெறுகிறது. ஸ்வச் பாரத் அபியான் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளின் உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. அதே நேரத்தில், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பேராசிரியர் மைக்கேல் க்ரீமர், ஜல் ஜீவன் மிஷன் பற்றி கூறுகிறார், இதனால் குழந்தைகள் இறப்பு விகிதம் பெரிய அளவில் குறைந்துள்ளது. முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டம் ஜல் ஜீவன் இயக்கத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பாராட்டியது மற்றும் உலகின் பிற பின்தங்கிய நாடுகளில் இதே போன்ற திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று கூறியது.

ஜல் ஜீவன் மிஷன் திட்டம் பிரதமர் நரேந்திர மோடியால் 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து ஸ்ரீ கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமையிலான ஜல் சக்தி அமைச்சகம் இந்த பணியை பொறுப்பேற்றுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்குள் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் போதுமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த திசையில், திட்டங்களை விரைவாக செயல்படுத்தி, அரசாங்கம் சுமார் 54 சதவீத வீடுகளை சுத்தமான குடிநீர் திட்டத்துடன் இணைத்துள்ளது. இந்த பணி 2019 இல் தொடங்கப்பட்டபோது, நாட்டின் கிராமப்புற மக்களில் கிட்டத்தட்ட பாதி பேர் சுத்தமான குடிநீர் கிடைக்காமல் தவித்தனர். கடந்த 70 ஆண்டுகளில், சுமார் 3.5 கோடி குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் பலனைப் பெற்றுள்ளன, அதேசமயம் மூன்றே ஆண்டுகளில் 7 கோடிக்கும் அதிகமான வீடுகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளன. அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்த திட்டத்தை தனித்தனியாக பார்க்கக்கூடாது. இந்த பணியின் வெற்றியில் ஸ்வச் பாரத் அபியானும் இணைக்கப்பட வேண்டும்.

# இந்தியன் அசோசியேஷன் ஆஃப் சர்ஜிக்கல் ஆன்காலஜி, புற்றுநோய் அறுவை சிகிச்சை துறை மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் இன்ட்யூட்டிவ் உடன் இணைந்து அறுவைசிகிச்சை புற்றுநோயியல் பற்றிய தேசிய மாநாட்டை நடத்துகிறது

சென்னை, அக்டோபர் 16 2022: இந்தியன் அஸோசியேஷன் ஆஃப் சர்ஜிக்கல் ஆன்காலஜி, புற்றுநோய் அறுவை சிகிச்சை துறை - மதுரை மருத்துவக் கல்லூரி, தமிழ்நாடு அஸோசியேஷன் ஆஃப் சர்ஜிக்கல் ஆன்காலஜிஸ்ட்ஸ் மற்றும் இன்ட்யூட்டிவ் இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து, அறுவை சிகிச்சை புற்றுநோயியல் குறித்த மூன்று நாள் தேசிய மாநாட்டை மதுரையில் நடத்தியது. ஐ எ எஸ் ஒ நாட்கான் 2022, என பெயரிடப்பட்ட இந்திய அறுவைசிகிச்சை புற்றுநோயியல் சங்கத்தின் 35வது ஆண்டு மாநாட்டை, ஐ எ எஸ் ஒ இன் முன்னாள் தலைவரும் நிறுவனர் செயலாளருமான டாக்டர் அசோக் மேத்தா, கௌரவ விருந்தினரான யூனியன் ஃபார் இன்டர்நேஷனல் கேன்சர் கண்ட்ரோல் இன் தலைவர் டாக்டர் அனில் டி'குரூஸ் முன்னிலையில் தொடங்கி வைத்தார். டாக்டர் எம்.ரமேஷ் - அமைப்புச் செயலாளர், நாட்கான் 2022, டாக்டர் டி.சுப்ரமணியேஷ் ராவ்- இயக்குனர், இந்தோ-அமெரிக்கன் கான்சர் சென்டர், டாக்டர் எஸ்பி சோமசேகர், மூத்த ஆர் எ எஸ் அறுவை சிகிச்சை நிபுணர், ஆஸ்டெர் மருத்துவமனை, டாக்டர் பிரசாந்த் பெனுமாடு, ஜிப்மர், டாக்டர் சரவண ராஜ மாணிக்கம், தங்கம் புற்றுநோய் மையம், ஆகியோர் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

இந்த முயற்சி குறித்து நாட்கான் இன் அமைப்புச் செயலாளர் டாக்டர் எம் ரமேஷ் கருத்துத் தெரிவிக்கையில், "இது அறிவைப் பரப்புவதற்கும், கருத்துக்கள் மற்றும் புதுமையான யோசனைகளைப் பகிர்வதற்கும், வலையமைப்பு மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைய முன்னேற்றுவதற்கான பொதுவான நோக்கத்திற்காக ஒத்துழைப்பதற்கும் எங்களின் பணிவான முயற்சியாகும். புற்றுநோயியல் அறுவை சிகிச்சை துறையில் முழுமையான நோயாளி பராமரிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்களை ஒன்றிணைக்க, இந்த தேசிய தளத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இந்த சிறப்பு தளத்தின் மூலம் ரோபோடிக்-உதவி அறுவை சிகிச்சை போன்ற மிகச் சமீபத்திய மருத்துவ முன்னேற்றங்களை எங்கள் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு பழக்குவித்து, மேலும் புற்றுநோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ விளைவுகளை வழங்க அவர்களுக்கு உதவுவோம். டா வின்சி போன்ற ரோபோடிக்-உதவி அமைப்புகள், அறுவை சிகிச்சை தேவைப்படும்

நோய்களுக்கு அறுவை சிகிச்சை நிபுணரை புதிய திறன்களை பெறுவதில் மிகவும் குறைவான கற்றல் விகிதத்துடன், குறைந்தபட்ச அணுகல் அணுகுமுறையை எடுக்க அனுமதிக்கின்றன. இது புற்றுநோயாளிகளுக்கு மட்டுமல்ல, ஆபத்தற்ற நோய் நிலையில் உள்ளவர்களுக்கும் உதவும்." என்று கூறினார்.

இந்த கூட்டு முயற்சி குறித்து கருத்து தெரிவித்த முன்னணி ஆர் எ எஸ் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் எஸ்.பி சோமசேகர், "இந்தியாவில், அறுவைசிகிச்சை புற்றுநோயியல் ஒரு குறிப்பிடத்தக்க அறுவை சிகிச்சை துணை சிறப்புப் பிரிவாக மாறியுள்ளது, மேலும் இந்தத் துறையில் ஆர் எ எஸ் இன் பயன்பாடு பல நன்கு அறியப்பட்ட நன்மைகளைக் கொண்டுள்ளது. இன்று, அதிகமான சுகாதார வல்லுநர்கள், ஆர் எ எஸ் போன்ற மேம்பட்ட அறுவை சிகிச்சை தொழில்நுட்பங்களை சிறந்த நோயாளி விளைவுகளுக்காக, குறிப்பாக புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்துகின்றனர். ரோபோடிக் அறுவை சிகிச்சையானது, வழக்கமான நுட்பங்களைக் காட்டிலும் அதிக துல்லியம், நெகிழ்வுத்தன்மை மற்றும் கட்டுப்பாட்டுடன் பல வகையான சிக்கலான நடைமுறைகளைச் செய்ய அறுவை சிகிச்சை நிபுணர்களை அனுமதிப்பதில் ஆச்சரியமில்லை. டா வின்சி 11 போன்ற சமீபத்திய ஆர் எ எஸ் அமைப்புகளின் மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, எங்கள் அறுவை சிகிச்சை நிபுணர்கள், கணினி வழிகாட்டப்பட்ட, பெரிதாக்கப்பட்ட, 3-டி காட்சிப்படுத்தலைப் பயன்படுத்தி, சிக்கலான அறுவை சிகிச்சைகளைச் செய்ய முடியும், இது சிறந்த நோயாளி விளைவுகளை ஏற்படுத்துகிறது. கூடுதலாக, இந்த அமைப்பு, நமது செயல்திறனை மேம்படுத்துகிறது மற்றும் உடலில் உள்ள கடினமான பகுதிகளுக்கு, நாம் சிறந்த அணுகலைப் பெறுவதை உறுதி செய்கிறது."என்று கூறினார்

"புற்றுநோய் அறுவை சிகிச்சையில் இத்தகைய தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பற்றி எங்கள் மருத்துவர்களிடையே பழக்கப்படுத்திக்கொள்வது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, மேலும் அந்த காரணத்திற்காக இதுபோன்ற ஒரு புதுமையான தளத்தின் கீழ் எங்களை ஒன்றிணைத்ததற்காக இந்திய அறுவைசிகிச்சை புற்றுநோயியல் சங்கம் மற்றும் இன்ட்யூட்டிவ் க்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். எங்கள் பார்வையில், இந்த தளத்தில் அறுவைசிகிச்சை நிபுணர்களின் பங்கேற்பு ஆனது, புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்களாக அவர்களின் சொந்த தொழில்முறை வளர்ச்சிக்கு இதுபோன்ற திட்டங்கள் எவ்வளவு மதிப்புமிக்கவை என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி காண்பிக்கும், " என்று டாக்டர் எஸ்பி சோமசேகர் மேலும் கூறினார்.

# யமஹா மோட்டார் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்! தமிழக அரசு தலையிட்டு சுமூகத் தீர்வு காண சிபிஐ(எம்) வலியுறுத்தல்



சென்னை, அக்டோபர் 16 2022: சி பி எம் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அறிக்கையில் இந்தியா யமஹா மோட்டார் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் 4 தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். பெரும்பான்மைத் தொழிலாளர்கள் தேர்வு செய்யும் தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதே பிரதான கோரிக்கையாக உள்ளது. மேலும், நிர்வாகம் திடீரென ஒரு போட்டி தொழிற்சங்கத்தை உருவாக்குவதும், அந்த சங்கத்தை 3 தினங்களில், தொழிற்சங்க சட்டப்படி தொழிலாளர்துறை பதிவு செய்வதும் ஜனநாயக விரோத செயல்களாகும். இதனால் தொழிலாளர்கள் மீது வேலை நிறுத்தம் திணிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 நாட்களாக அமைதியாக எந்தவித இடையூறும் செய்யாத வகையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்களின் கோரிக்கைகளையும், வேலை நிறுத்தத்தையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆதரிக்கிறது.

கடந்த 2015ல் நடைபெற்ற 55 நாட்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தே, இந்தியா யமஹா மோட்டார் தொழிலாளர் சங்கத்தை நிர்வாகம் அங்கீகரித்தது. ஊதிய உயர்வு ஒப்பந்தமும் செய்தது. ஆனால் தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சங்கத்தின் நிர்வாகிகளை ஜனநாயக அடிப்படையில் தேர்வு செய்ததை குற்றமாக நிர்வாகம் கருதும் காரணத்தாலேயே, இந்தியா யமஹா மோட்டார் தொழிலாளர் சங்கத்தை நிராகரித்து, போட்டி சங்கத்தை உருவாக்குகிறது. இச்செயலை தமிழகத்தின் அனைத்து ஜனநாயக சக்திகளும் வன்மையாக கண்டிக்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கேட்டுக் கொள்கிறது.

இப்பிரச்சனை குறித்து தமிழ்நாடு அரசு தலையீடு செய்வதும், சுமூகத் தீர்வு காண ஏற்பாடு செய்வதும் அவசியம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சுட்டிக்காட்ட விரும்புகிறது.